# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19-A, ருக்மினி லட்சுமிபதி சாலை (மார்ஷல் சாலை)

எழும்பூர், சென்னை – 600 008,

தொலைபேசி : ++91-44-28411376 / 28411378 / 28411379

நிகரி: ++91-44-28411377

மின்னஞ்சல்: tnerc@nic.in இணையதளம்: www.tnerc.gov.in

எண் 3/2012

நாள் 08–05–2012

## செய்திக் குறிப்பு

2012–2013 ஆம் நிதியாண்டிற்காக தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகம் லிமிடெட்டிற்கு அரசால் வழங்கப்பட வேண்டிய மானியம் ரூ.4024.96/– கோடி என தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயம் செய்துள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட மின்கட்டண வீதத்தைவிட குறைவான மின்கட்டண வீதத்தை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்யுமானால், 2003 ஆம் ஆண்டு மின்சார சட்டத்தின் 65 ஆம் பிரிவின்படி அரசு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகத்திற்கு மானியம் வழங்க வேண்டும்.

பெரும்பான்மையான வீட்டு மின்உபயோகிப்பாளர்களுக்கு மின்கட்டண வீதத்தில் ஒரு பகுதி, அதாவது, ஒரு யூனிட்டிற்கு ரூ.1.00 முதல் ஒரு யூனிட்டிற்கு ரூ.1.60 வரை, உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது. குடிசைவாசிகள் மற்றும் விவசாயிகளுக்கு முழுவதுமாக மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

மொத்த மானியத் தொகையில் கிட்டத்தட்ட 49 விழுக்காடான ரூ.1971.71 கோடி விவசாய மின்உபயோகிப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மானியத் தொகையின் 44 விழுக்காடான ரூ.1767.72 கோடி வீட்டு மின்உபயோகிப்பாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 விழுக்காட்டுத் தொகையான ரூ.285.53 கோடி குடிசை மின் உபயோகத்திற்காகவும்,

கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள் மின்உபயோகத்திற்காகவும், பொது வழிபாட்டிடங்கள் மின்உபயோகத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 65 ஆம் பிரிவு மானியத்தை முன்னதாக வழங்குமாறு மாநில அரசசை வலியுறுத்துகிறது. அவ்வாறு வழங்கத் தவறுமானால், மாநில ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட மின்கட்டணம் பொருந்தக்கூடியதாகும். மானியத் தொகை கணக்கிடுதல் தற்போதுள்ள மின்கட்டண வீதத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது.

சி.குணசேகரன்
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.